09.02.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.155 /2021 ) திரு.பரமன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) நான் தலையால்நடந்தான்குளம் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்துள்ள வாதி எனது அண்ணன் தலையால்நடந்தான்குளம் கிராமத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் அனுப்பியுள்ளேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பை எனது தரப்பு ஆவணமாக வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவது போன்று பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றும் அதை வழக்கில் தாக்கல் செய்துள்ளதாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா வழக்கு 2 தபசில் சொத்திற்காக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 1ம்தபசில் சொத்தில் 1/21 வாதிக்கு பங்கு கேட்டும், 2வது தபசில் சொத்தில் 1/7 பங்குகேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு 1வது தபசில் சொத்து பூர்வீகச்சொத்துக்கள் என்றால் பூர்வீகச்சொத்தாக இருந்தாலும் அவர் வாங்கிய சொத்தாக இருந்தாலும் மொத்தமாக அப்பா சொத்து என்று பங்கு வைக்கப்பட்டள்ளது. எனது தகப்பனார் 3ம்பிரதிவாதியாக இருந்து தாக்கல் செய்த எதிர்வழக்குரையை காண்பிக்கப்பட்டு சரிதானா என்று கேட்ட போது ஆமாம் என்று சாட்சி கூறுகிறார். எதிர்வழக்குரையில் பிராது 3வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள 1வது தபசில் சொத்தை பற்றிய தகவல் சரியென ஒப்புக்கொள்ளப்படுகிறது என காணப்படுகிறது என்றால் சரிதான். வழக்குசொத்து எனது தகப்பனாருக்கு எனக்கு எனது சகோதர சகோதரிகளுக்கு எழுதிக்கொடுத்த சொத்துக்களில் ராஜம்மாளுக்கு பாத்தியம் உள்ளதா என்றால் இல்லை மீண்டும் சாட்சி தன்னிட்சையாக பூர்வீகச்சொத்தில் ராஜம்மாளுக்கு பங்கு உண்டு என்று கூறுகிறார். 2ம்தபசில் சொத்தை பொறுத்து எனது தகப்பனாரின் பெயரில் பட்டா இல்லை என்றால் சரிதான். பட்டா ஏற்பட்ட சமயத்தில் நான், வாதி, உடன்பிறந்த சகோரிகள் பிறந்திருந்திருந்தோம் என்றால் சரிதான்.

2) வழக்கு பிராது 1 வது தபசில் சொத்தில் வழக்கில் கண்டுள்ள நபர்களுக்கு பங்கு உண்டு என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் பிராது 2 வது தபசில் சொத்து எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட கிரையம் பெற்ற சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.அந்த கிரைய ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 2 வதுதபசில் சொத்தில் தங்கவேலுக்கும், முருகாண்டிக்கும் ஆகிய 1,2 பிரதிவாதிகளுக்கு பங்கு கிடையாது என்றால் சரிதான். எதிர்வழக்குரை பாரா4 ல் எனது தாத்தா இறந்த பின்னர் 1 வது தபசில் சொத்துக்கள் வாய்மொழியாக பாகம் பிரிக்கப்பட்டு அதன் பின்னர் எனது தகப்பனாருக்கு தனித்துப்பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். எந்த வருடம்,எந்த தேதியில், வாய்மொழி பாகம் செய்யப்பட்டது யார் முன்னிலையில் செய்யப்பட்டது என்ற விவரம் எதிர்வழக்குரையில் இல்லை என்றால் சரிதான் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் பங்கு வைத்துக்கொண்டோம். தற்போதும் தாவா 1 வது தபசில் சொத்துக்கு எனது தாத்தா பலவேசம் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான் ஆனால் பத்திரம் முடிந்த பின்னர் எனது அண்ணன் செல்லத்துரை பெயருக்கு பட்டா மாறிவிட்டது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை காண்பித்து எனது தகப்பனாரான 3 ம்பிரதிவாதி 5 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பதிவு ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 பிராது 1 வது தபசில் சொத்தை பொறுத்து எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் சொத்து விவரத்தில் பிரிவின்றி என்று காண்பித்து எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் 28.06.2021 ல் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் இந்த சொத்து தான் பூர்வீகச்சொத்தாகும். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எந்த பகுதியிலாவது எனது தகப்பனாருக்கு வாய்மொழியாக பிரித்து கிடைக்கப்பெற்றதாக வாசகம் கண்டுள்ளதா என்றால் இல்லை சொத்தை எழுதிக்கொடுத்தாக சொல்லப்பட்டுள்ளது. பட்டா எண்.452 எனது தாத்தா பலவேசம் பெயரில் இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு 2 வது தபசில் சொத்தை பொறுத்து கிரையம் மூலம் பாத்தியப்பட்ட தனித்த சொத்து என்று சொல்லுவதற்கு கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஆவணம் 3 ம்பிரதிவாதி 4 ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கிரைய மூலமாகவும்,

பூர்வீகமூலமாகவும் பாத்தியப்பட்டது என்று கண்டுள்ளது என்றால் சரிதான்.அந்த கிரைய ஆவணத்தினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3) பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சொத்து விவரத்தில் 6,7 அயிட்டச்சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் இதர சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சியாக அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பிராதில் 2வது தபசில் சொத்து எனது தகப்பனாருக்கு எந்தக்காலத்திலும் சுயமாகப்பாத்தியப்பட்டது அல்ல என்றும் மூத்தவர் என்பதால் எனது அப்பா பெயருக்குபட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1,4,5 ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் எனது அப்பா சுயசம்பாத்தியமாக உள்ள சொத்துக்களைத்தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1,4,5 ஆவணங்களில் கண்ட சொத்துக்களை பொறுத்து வாதி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளார்கள் சாட்சியாக ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். பி.வா.சா.ஆ.3 ஆவணம்மூலம் 3ம்பிரதிவாதிக்கு 4ம்பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்த பின்னர் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் முதலிலே பங்கு வைத்துவிட்டோம் அப்போது பணம் இல்லாததால் கொஞ்ச கொஞ்சமாக பத்திரம் முடித்துக்கொண்டோம். பி.வா.சா.ஆ.1 ஆவணம் 3ம்பிரதிவாதி வாதிக்கு எழுதிக்கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து பி.வா.சா.ஆ.1ல் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் மொத்தமாகத்தான் எழுதிக்கொடுத்துள்ளார். பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து எனது அப்பா கிரையம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தை தான் வாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு 1,2 தபசில் சொத்துக்களை தற்போதும் கூட்டாகத்தான் அனுபவம் செய்துவருகிறோம் என்றால் அவரவர்கள் பெயருக்கு பங்கு வைத்துக்கொண்டபடி அனுபவம் செய்து வருகிறோம். எங்களுக்குள் எப்போது பங்கு வைத்துக்கொண்டோம் என்ற விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஊர்பெரியவர்கள் முன்னிலையில் பங்கு வைத்துக்கொண்டோம். தாவா 1வது தபசில் சொத்து எனது பெரியப்பா தங்கவேலுக்கும், 2ம்பிரதிவாதி முருகாண்டி, மற்றும் நான், எனது அப்பா, எனது சகோதர சகோதரிகள் கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிராது 2வது தபசில் சொத்தில் எனது தகப்பனார் 3ம்பிரதிவாதி, வாதி,4 முதல் 8 பிரதிவாதிகள் அனைவரும் சேர்ந்து கூட்டாகத்தான் அனுபவம் செய்து வருகிறோம்

என்றால் சரியல்ல அவரவர்கள் பெயரில் பத்திரம் கிடைத்தன்படி அனுபவம் செய்துவருகிறோம். வாதிகோரிய படி வழக்கில் பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றும் எங்களின் பத்திரப்படி வாதிகளின் பங்கைப்பொறுத்து வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
09.02.2026.